**THOOTHUKUDI CITY MUNICIPAL CORPORATION**

**FORM -3**

**MINUTES OF THE COUNCIL MEETINGS**

**(See rule 5 and Serial Number 3 of Appendix 1)**

**<u>அவசரக் கூட்டப்பொருள்</u>**

2012ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 15ஆம் நாள் திங்கள்கிழமை காலை 10.30 மணிக்கு 2008 ஆம் வருடத்திய தூத்துக்குடி மாநகராட்சி சட்டம் அட்டவணை 1 பிரிவு எண் 3 (2)ன் கீழ் தூத்துக்குடி மாநகராட்சி அலுவலகக் கட்டிடத்திலுள்ள மாமன்ற கூட்டரங்கத்தில் நடைபெறும் அவசரக் கூட்டத்தில் கீழ்க்கண்ட பொருள்கள் ஆலோசனைக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

**<u>பொருள்கள்</u>**

| மாமன்ற கூட்ட தேதி | வரிசை எண் மற்றும் மாமன்றப் பொருள் | மாமன்ற தீர்மானம் |
|---|---|---|
| 15.10.12 | 1. தூத்துக்குடி மாநகரமானது வளர்ந்து வரும் பெரிய தொழில் நகரமாகும். தற்போது தூத்துக்குடி நகராட்சியுடன் அருகிலுள்ள மீளவிட்டான், சங்கரப்பேரி, முத்தையாபுரம், அத்திமரப்பட்டி, தூத்துக்குடி ரூரல் என ஐந்து ஊராட்சிகளை உள்ளடக்கி மாநகராட்சியாக செயல்பட்டு வருகிறது. மாநகரின் வளர்ச்சி மற்றும் பெருகிவரும் மக்கள் தொகை ஆகியவற்றின் அடிப்படையில், அடிப்படை கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த வேண்டியது இன்றியமையாததாகும். எனவே பொதுமக்களின் நலன்கருதி தமிழக அரசால் அறிவிக்கப்பட்ட “ஒருங்கிணைந்த பேருந்து நிலையம்’’ அமைக்க நடவடிக்கை மேற்கொண்டு வரும் நிலையில் தூத்துக்குடி துறைமுகத்தினருக்கு சொந்தமான இடம் குறித்து மாவட்ட ஆட்சியர் அவர்களுக்கு மேற்படி துறையினரிடமிருந்து உரிய அனுமதி இதுவரை வரப்பெறாத சூழ்நிலையில், மேற்படி பணியானது துவங்குவதற்கு தொடர்ந்து காலதாமதம் ஏற்பட்டு வருவதால் மேற்படி பொருள் தொடர்பாக மாமன்றத்தால் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களை ரத்து செய்து பொதுமக்கள், வர்த்தக சங்கங்கள் மற்றும் பல்வேறு தரப்பினரிடமிருந்து வரப்பெற்ற கோரிக்கைகளின் அடிப்படையில் தற்போது இயங்கிவரும் அண்ணா பேருந்து நிலையம், தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழக பணிமனை, எஸ்.ஏ.வி. பள்ளி விளையாட்டு மைதானம் மற்றும் அண்ணா பேருந்து நிலைய மேற்கு பக்கமுள்ள தென்வடல் சாலை ஆகியவற்றை உள்ளடக்கிய இடத்தில் “ஒருங்கிணைந்த பேருந்து நிலையம்’’ அமைக்க மாமன்றம் தீர்மானிக்க. | 214) மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் தேர்தல் வாக்குறுதி என்பதாலும் மக்களது உணர்வுகளுக்கு மதிப்பளிக்கும் வகையிலும் எஸ்.ஏ.வி. பள்ளி விளையாட்டு மைதானம், தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழக பணிமனை மற்றும் அண்ணாபேருந்து நிலைய மேற்கு பக்கமுள்ள தென்வடல் சாலை இடமும் சேர்ந்தாற்போல் ஒருங்கிணைந்த பேருந்து நிலையம் கொண்டு வரப்பட வேண்டும் என்று மன்றம் தீர்மானிக்கிறது.<br>மாவட்ட ஆட்சியர் எஸ்.ஏ.வி. பள்ளி விளையாட்டு மைதான இடத்தை விளையாட்டு மைதானத்திற்காக தேவை என்று அதிகாரிகள் கருதுவதாகவோ, மேயர் மற்றும் மாமன்ற உறுப்பினர்களிடம் நடத்திய பேச்சு வார்த்தையில் உடன்பாடு எட்டவில்லை என்றோ குறிப்பு அரசாங்கத்திற்கு அனுப்பினால் கூட மாநகராட்சி மாமன்ற உறுப்பினர்கள் அவ்விடத்தை மேற்படி விளையாட்டு மைதானத்திற்கு ஒதுக்காமல் மாண்புமிகு தமிழக முதல்வர் ஆணைப்படி ஒருங்கிணைந்த பேருந்து நிலையத்திற்கு தரும்படி மாமன்றம் கேட்டுக்கொள்கிறது.<br>மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் அளித்த தேர்தல் வாக்குறுதியை நிறைவேற்றும் பொருட்டு எஸ்.ஏ.வி. பள்ளி விளையாட்டு மைதானம் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழக பணிமனை இடம் மற்றும் அண்ணா பேருந்து நிலைய மேற்கு பக்கமுள்ள தென்வடல் சாலை ஆகியவற்றை இணைத்து ஒருங்கிணைந்த பேருந்து நிலையம் வர மாமன்றத்தால் தீர்மானிக்கப்பட்டது. |

| | | | |
|---|---|---|---|
| | 2. | தூத்துக்குடி மாநகராட்சி தெப்பம் முதல் ராஜாஜி பூங்கா நீர்த்தேக்க நிலையம் வரையுள்ள 600mm, 500, 400mm PSC மற்றும் 600mm RCC தன்னோட்டக் குழாய்களில் ஏற்பட்டுள்ள கசிவுகளை குடிநீர் அவசர அவசியம் கருதி உடனே சரிசெய்ய, மாநகராட்சி விதி எண் 15ன் கீழ் ரூ.231907/– செலவு செய்தது மாமன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.<br><br>**<u>அலுவலகக் குறிப்பு</u>:** மாமன்றம் பதிவு செய்யலாம்.<br><br>மதிப்பீடு எண் 148/12–13 | 215) பதிவு செய்யப்பட்டது |
| | 3. | தூத்துக்குடி மாநகராட்சிக்கு உட்பட்ட சாமுவேல்புரம் மேல்நிலைப்பள்ளி 2012–13 முதல் மேல்நிலைப் பள்ளியாக தரம் உயர்த்தப்பட உள்ளதால் பள்ளி தலைமை ஆசிரியர் அவர்கள் முதன்மை கல்வி அலுவலகம் வழியாக அரசு தலைப்பில் ரூ.2,00,000/– (ரூபாய் இரண்டு லட்சம் மட்டும்) செலுத்த கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.<br><br>எனவே சாமுவேல்புரம் பள்ளி தலைமை ஆசிரியர் அவர்கள் மாநகராட்சி ஆணையர் அவர்களிடம் ரூ. 2.00 லட்சம் வழங்க உதவி கேட்டுள்ளார். மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**<u>அலுவலகக் குறிப்பு</u>:**<br>1) மாமன்றம் அனுமதிக்கலாம்.<br>2) மாமன்ற அனுமதியை எதிர்நோக்கி நடவடிக்கை எடுத்ததையும் அனுமதிக்கலாம்.<br><br>சி4/17838/12 | 216) அலுவலகக் குறிப்பு 1 மற்றும் 2 அனுமதிக்கப்பட்டது. |